செ. கு. எண்: 026 நாள்: 29.02.2020

<u>மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு. எடப்பாடி K.பழனிசாமி** அவர்களின் அறிக்கை – 29.2.2020</u>

விழுப்புரம் மாவட்டம், செஞ்சி வட்டம், நங்கிலிகொண்டான் கிராமம், திண்டிவனம்-திருவண்ணாமலை தேசிய நெடுஞ்சாலையில் ஏற்பட்ட விபத்தில் திரு. இளங்கோ என்பவரின் மகன் திரு. இளவரசன், திரு. பச்சையப்பன் என்பவரின் மகன் திரு. சத்தியசாய்பாபா மற்றும் திரு. சையத்மொய்தீன் என்பவரின் மகன் திரு. சாதிக்பாஷா ஆகிய மூவரும் உயிரிழந்தனர் என்ற செய்தியையும்;

சேலம் மாவட்டம், சங்ககிரி வட்டம், காவேரிப்பட்டி கிராமத்தைச் சேர்ந்த திரு. சின்னதுரை என்பவரின் மகன் திரு. அய்யண்ணன் என்பவர் தண்ணீர்தாசனூர் வாய்க்காலில் குளிக்கச் சென்ற போது எதிர்பாராத விதமாக நீரில் மூழ்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

கள்ளக்குறிச்சி மாவட்டம், சங்கராபுரம் வட்டம், மூக்கனூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. அசோக்குமார் என்பவரின் குழந்தைகள் செல்வி அபிராமி மற்றும் செல்வி திவ்யா ஆகிய இருவரும் விவசாய நிலத்தின் அருகில் உள்ள ஏரியில் குளிக்கும் போது, எதிர்பாராத விதமாக நீரில் மூழ்கி உயிரிழந்தனர் என்ற செய்தியையும்;

செங்கல்பட்டு மாவட்டம், செங்கல்பட்டு வட்டம், தைலாவரம் கிராமம் அருகே நடந்த சாலை விபத்தில் சென்னை, திருவொற்றியூரைச் சேர்ந்த திரு. சரவணமூர்த்தி என்பவர் உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

இராணிப்பேட்டை மாவட்டம், அரக்கோணம் வட்டம், மேல்பாக்கம் கிராமத்தைச் சேர்ந்த திருமதி ராதிகா என்பவரின் கணவர் திரு. லோகநாதன் என்பவர் அரக்கோணத்திலிருந்து நெமிலி செல்லும் சாலையில் ஏற்பட்ட விபத்தில் உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வட்டம், லெவிஞ்சிபுரம் கிராமத்தைச் சேர்ந்த திருமதி கலா என்பவரின் கணவர் திரு. முத்துக்குமார் என்பவர் சாலை விபத்தில் உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு வட்டம், களியக்காவிளை கிராமத்தைச் சேர்ந்த திரு.ஹாரீஸ் என்பவர் அரசுப் பேருந்து மோதியதில், பலத்த காயமடைந்து, மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம் வட்டம், கோணமூலை கிராமத்தைச் சேர்ந்த திரு. பாலசுப்பிரமணியன் என்பவரின் மகன் திரு. ஜெயக்குமார் என்பவர் சேலம் – சென்னை தேசிய நெடுஞ்சாலையில் ஏற்பட்ட சாலை விபத்தில் உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

திருவாரூர் மாவட்டம் மற்றும் வட்டம், அழகிரி நகரைச் சேர்ந்த திரு. அப்பாவு என்பவரின் மகன் திரு. மாரிமுத்து என்பவர் தனது வீட்டின் மேல் கூரை இடிந்து விழுந்து உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

செங்கல்பட்டு மாவட்டம், பல்லாவரம் வட்டம், எல்.ஐ.சி. காலனியைச் சேர்ந்த திரு. சாய்சந்திரசேகர் என்பவர் குடும்பத்துடன் கோவில் சென்று விட்டு வீடு திரும்பும் போது, திருவள்ளூர் மாவட்டம், பட்டரை பெரும்பதூர் கிராமத்தில் ஏற்பட்ட சாலை விபத்தில், அவரும் அவரது மனைவி திருமதி புஷ்கலாவும், மகன் சிறுவன் தருண்கிருஷ்ணாவும் உயிரிழந்தனர் என்ற செய்தியையும்;

கன்னியாகுமரி மாவட்டம், அகஸ்தீஸ்வரம் வட்டம், தென்தாமரைகுளம் கிராமத்தைச் சேர்ந்த திருமதி பத்மாவதி என்பவரின் கணவர் திரு. மோகன் என்பவர் விவசாய நிலத்திற்கு சென்ற போது வாய்க்கால் நீரில் தவறி விழுந்து உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

கிள்ளியூர் வட்டம், மாங்காடு கிராமத்தைச் சேர்ந்த திரு. நேசையன் என்பவரின் மனைவி திருமதி பால்தங்கம் என்பவர் கடல் அலையில் சிக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

சென்னை மாவட்டம், பெரம்பூரைச் சேர்ந்த திருமதி முனியம்மாள் என்பவரின் கணவர் திரு. கஜேந்திரன் என்பவர் விழுப்புரம் மாவட்டம், வானூர் வட்டம், நல்லாவூர் கிராமத்தில் உள்ள குளத்தில் குளிக்கும் போது எதிர்பாராத விதமாக நீரில் மூழ்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகுந்த வேதனை அடைந்தேன்.

மேற்கண்ட பல்வேறு விபத்துகளில் உயிரிழந்த மேற்கண்ட **18** நபர்களின் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தத் துயரச் சம்பவங்களில் **உயிரிழந்த 18 நபர்களின் குடும்பத்திற்கு தலா ஒரு லட்சம் ரூபாய்** முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**K.பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**